# யேர்மன் தமிழ்க் கல்விச் சேவை

## Tamilischer Bildungsverein Deutschland

பொதுப் பரீட்சை - 2017 / 2018

தமிழ்மொழி

ஆண்டு: 10 நேரம்: 3.00

சுட்டெண்: ........................

பகுதி 1

எல்லா வினாக்களுக்கும் விடை தருக.

1) பின்வரும் வாக்கியங்கள் ஒவ்வொன்றிலும் கோடிட்ட இடத்தை நிரப்புவதற்கு மிகப் பொருத்தமான சொற்களைத் தெரிவு செய்து எழுதுக.

பண்ணத்தி, வாழ்க்கையோடு, மெலிவும், காற்றில், புதுமை.

அ) விடுதலை பெற்றோர் ............................................. நோயும் நீங்கி வலிமையும் உறுதியும் பெறுவார்கள்.

ஆ) நம் குடும்பங்கள் ............................................ விதிக்குரங்கு கிழித்தெறியும் பஞ்சுத் தலையணையா?

இ) பெருநிகழ்ச்சிகளால் சுற்றுச்சூழல் மாறும் போது ............................................. பிறக்கிறது.

ஈ) தொல்காப்பியர் கூறும் ............................................. என்பது கூத்துப்பாடல் வகையைச் சேர்ந்தது.

உ) சிறுகதையின் கருப்பொருள் ............................................. தொடர்பு கொண்ட எதுவாக வேண்டுமானாலும் இருக்கலாம்.

2) பின்வரும் வினாக்களுக்குப் பொருத்தமான விடையினைத் தெரிவு செய்க.

அ) செய்வதை இப்போது செய். வருவதை மறுகா பார்ப்போம். இங்கு மறுகா என்பது (வடக்குப் பிரதேச கிளைமொழி, மலையகக் கிளைமொழி, மீனவசமூக மொழி, கிழக்குப்பிரதேசக் கிளைமொழி)

ஆ) கண்ணன் வீட்டில் சுதந்திரமாக ஆடி, ஓடி, பாடி, விளையாடி மகிழ்ந்தான். இது (கூட்டுவாக்கியம், தனிவாக்கியம், தொடர்வாக்கியம், கலப்பு வாக்கியம்)

இ) ஒருவன் தன் முயற்சியில் (ஆறஅமர, அல்லும்பகலுமாக, ஏட்டிக்குப்போட்டியாக, கண்ணுங்கருத்துமாக) உழைத்து உலகசாதனை படைத்தான்.

ஈ) சிங்கத்தின் இளமைப்பெயர் (பிள்ளை, கன்று, குருளை, குஞ்சு)

உ) குற்றம் சாட்டப்பட்டவன் தன்னைக் குற்றமற்றவன் என்று நிரூபிப்பதற்காக ஆதாரம் தேடினான். இங்கு ஆதாரம் என்பதற்கு எதிர்க்கருத்துச் சொல் (அவதாரம், நிராதாரம், சேதாரம், நிராயுதம்)

ஊ) திருப்பதியடையாத மனத்தைக் குறிக்கும் பழமொழி (அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு, ஆலையில்லா ஊருக்கு இலுப்பைப் பூச்சக்கரை, இக்கரைக்கு அக்கரைப்பச்சை, ஆனைக்கும் அடிசறுக்கும்)

எ) வறியவர்களுக்கும், அங்கவீனர்களுக்கும், முதியவர்களுக்கும், உண்டியும், உறையுளும், அளித்து ஆதரிக்கும் இடம் (அகதிமுகாம், ஆச்சிரமம், பண்டகசாலை, ஆதுலர்சாலை)

ஏ) விவாதமேடையை சிறப்பிப்பதற்காக அறிவழகு வந்தான். இங்கு அறிவழகு வந்தான் என்பது (உம்மைத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை, பண்புத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை, உவமைத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை, வேற்றுமைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை)

ஐ) முகிலினங்கள் அலைகிறதே முகவரிகள் தொலைந்தனவோ. இங்கு பயன்படுத்தப்பட்ட அணி (உவமைஅணி, உருவகஅணி, தற்குறிப்பேற்றஅணி, உயர்வுநவிற்சியணி)

ஒ) தேனீ ரீங்காரம் செய்வது போல் பல்லி ( கத்தும், சொல்லும், அலறும், இரையும்)

3) பின்வரும் சொற்களுக்குப் பொருத்தமான எதிர்க்கருத்துச் சொற்களை எழுதுக.

அ) ஐயம் .............................................................

ஆ) ஆசை .............................................................

இ) இரகசியம் .............................................................

ஈ) உபகாரம் .............................................................

உ) ஆணவம் .............................................................

4) பின்வருவனவற்றுள் சரியான விடையின் கீழ்க் கீறிடுக.

அ) விடுகணை என்பது (உவமைத்தொகை, பண்புத்தொகை, வினைத்தொகை, உவமைத்தொகை)

ஆ) விழுந்த பழம் (பெயரெச்சத்தொடர், அடுக்குத்தொடர், உரிச்சொற்றொடர், வினையெச்சத்தொடர்)

இ) இறந்தகால இடைநிலைகள் (த்,ட்,ற்,ன் - ப்,வ் - கின்று,கிறு – கள்,மார்)

ஈ) கவிஞரால் கவிதை எழுதப்பட்டது. இவ்வாக்கியம் (செய்வினை, செயப்பாட்டுவினை, தன்வினை, பிறவினை)

உ) இவனோ இளையவன் என்னும் வாக்கியம் (தெரிநிலையை, பிரிநிலையை, எதிர்மறையை, இழிவுச்சிறப்பை) காட்டுகிறது.

ஊ) பொருளுக்கு உரிமை பூண்டுநிற்கும் பண்பை உணர்த்தும் சொல் (பெயர்ச்சொல், இடைச்சொல், வினைச்சொல், உரிச்சொல்)

எ) நான் விழுந்தவனை எழுப்பினேன். இவ்வாக்கியத்தில் விழுந்தவனை என்பது (வினையெச்சம், பெயரெச்சம், வினையாலணையும்பெயர், குறிப்புவினையெச்சம்)

ஏ) எந்த வேற்றுமை, உடைமைப் பொருளை உணர்த்தி வரும். (முதலாம் வேற்றுமை, இரண்டாம் வேற்றுமை, மூன்றாம் வேற்றுமை, ஆறாம் வேற்றுமை)

ஐ) உயிர்முன் உயிர் புணரும் புணர்ச்சி விதிக்கு உதாரணம் (மரம் + வேர், கல் + குதிரை, கடல் + அலை, தே + ஆரம்)

ஒ) பாற்குடம் என்பது (திரிதல், தோன்றல், கெடுதல், இயல்பு) புணர்ச்சியில் புணர்ந்துள்ளது.

5) பின்வருவனவற்றில் சேர்ந்திருப்பதைப் பிரித்தும், பிரிந்திருப்பதைச் சேர்த்தும் எழுதுக.

அ) மெய் + ஞானம் = ........................................................................

ஆ) வாள் + படை = ........................................................................

இ) வேர் + கடலை = ........................................................................

ஈ) கோயில் = ........................................................................

உ) மரத்தை = ........................................................................

6) பின்வரும் சொற்களை இணைத்து வாக்கியம் எழுதுக.

அ) புதுக்கவிதை ..........................................................................................
..........................................................................................

ஆ) உழவர் ..........................................................................................
..........................................................................................

இ) கல்வி ..........................................................................................
..........................................................................................

ஈ) வேற்றுமை ..........................................................................................
..........................................................................................

உ) அறிவியல் ..........................................................................................
..........................................................................................

# யேர்மன் தமிழ்க் கல்விச் சேவை
## Tamilischer Bildungsverein Deutschland

பொதுப் பரீட்சை - 2017 / 2018
தமிழ்மொழி

ஆண்டு: 10

பகுதி 2

முதலாம் வினாவுக்கும் ஏனைய இரண்டு வினாக்களுக்குமாக மூன்று வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும்.

1) பின்வருவனவற்றுள் ஒன்றைப் பற்றி 200 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை வரைக.

அ) சிறுகதை
ஆ) மொழியும் வளர்ச்சியும்
இ) தொலைத்தொடர்பு சாதனங்கள்
ஈ) காலநிலை மாற்றங்கள்
உ) நீங்கள் வசிக்கும் நாட்டின் மொழி பற்றி எழுதுக.

2) பக்தி மனிதமனங்களில் ஏற்படுத்தும் மாற்றங்களை விளக்குக.
3) நீங்கள் பார்த்து ரசித்த திரைப்படம் ஒன்றினை விமர்சனம் எழுதுக.
4) உங்களைக் கவர்ந்த ஒரு நாடு பற்றிய விவரணத்தை எழுதுக.
5) அன்பை வெளிப்படுத்தும் முறைகளை விளக்குக.
6) வீதி விபத்துக்கள் நடப்பதற்கான காரணங்களை எழுதுக.